6 வது தமிழ் வினா - விடை அமைப்பு :-

1) இராமலிங்க அடிகளாரின் சிறப்பு பெயர் யாது? = திருவருட்பிரகாச வள்ளலார், புரட்சி துறவி

2) இராமலிங்க அடிகளார் பிறந்த ஊர் எது? = கடலூர் மாவட்டம் - மருதூர் ஊர்

3) இவருடைய நூல்கள் யாது? = ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம், வடிவுடைமாணிக்க மாலை, எழுத்தறியும் பெருமான் மாலை

4) கந்தக்கோட்டத்து இறைவன் மீது இவர் பாடிய பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
= வடிவுடைமாணிக்க மாலை

5) இவர் திருவொற்றியூர் சிவபெருமான் மீது போற்றி பாடிய நூல் எது?
= எழுத்தறியும் பெருமான் மாலை

6) இராமலிங்க அடிகளார் பதிப்பித்த நூல்கள் யாது?
= தொண்டமண்டலசதகம், ஒழுவிலொடுக்கம், சின்மயதீபிகை

7) யாருடைய பாடல்கள் இறைவன் அருள் பெற்ற பாடல்கள் என கூறப்படுகிறது?
= இராமலிங்க அடிகளார்

8) வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய மனம் கொண்டவர் = இராமலிங்க அடிகளார்

9) கடவுளை "கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்", என்றும் "உயிரில் கலந்தான் கருணை கலந்து" என்றும் பாடியவர் = இராமலிங்க அடிகளார்.

10) இராமலிங்க அடிகளார் பாடல்கள் எந்த பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன? = திருவருட்பா

11) இராமலிங்க அடிகளார் ஆசிரியர் பெயர் யாது = காஞ்சி மகாவித்வான் சபாபதி முதலியார்

12) யார் வேண்டுகோள் இணங்க மனுமுறைகண்ட வாசகம் என்ற நூலை இவர் எழுதினார்?
= காஞ்சி மகாவித்வான் சபாபதி முதலியார்

13) மனுமுறைகண்ட வாசகம் என்ற நூல் யாருடைய வரலாற்றை கூறுகிறது?
= மனுநீதி சோழன் வரலாறு

14) இராமலிங்க அடிகளார் எந்த ஆண்டு மதங்களின் நல்லிணக்கம் காண சமரச சன்மார்க்க

சங்கத்தை ஏற்படுத்தினார்? = 1865 - 42 வது வயதில்

15) இராமலிங்க அடிகளார் எந்த ஆண்டு பசிப்பிணி போக்க தருமச்சாலையை நிறுவினார்?
= 1867 - 44 வது வயதில்

16) இராமலிங்க அடிகளார் எந்த ஆண்டு அறிவுநெறி விளங்க சத்தியனாசபையை நிறுவினார்?
= 1872 - 49 வது வயதில்

17) இராமலிங்க அடிகளாரின் தாரகமந்திரம் எது? = அருட்பெரும்சோதி தனிப்பெருங்கருணை

18) இராமலிங்க அடிகளாரின் கோட்பாடு எது? = ஆன்மநேய ஒருமைப்பாடு

19) இராமலிங்க அடிகளாரின் கொள்கை யாது?
= ஜீவகாருண்யம் அதுவே பேரின்ப வீட்டின் திறவுகோல்

20) இராமலிங்க அடிகளாரை 'புதுநெறி கண்ட புலவர்' என்று பாராட்டியவர் யார்? = பாரதியார்

21) திருவருட்பாவை மருட்பா என்று கூறியவர் யார்? = ஆறுமுக நாவலர்

22) திருவருட்பா நூல் அமைப்பு யாது? = 6 திருமுறைகள் + 5818 பாடல்கள்

23) இராமலிங்க அடிகளார் பிறப்பு - இறப்பு ஆண்டு? = 1823 - 1874

24) நாலடியார் பாடல்கள் யாருடைய பாடல்களின் தொகுப்பாகும்? = சமண முனிவர்கள்

25) நாலடியாரின் வேறு பெயர்கள் யாது?
= சாம வேதம், வேளாண் வேதம் மற்றும் நாலடி நானூறு

26) நாலடியாருக்கு கடவுள் வாழ்த்து பாடியவர் யார்? = பதுமனார்

27) நாலடியார் நூல் அமைப்பு?
= அறத்துப்பால் - 13; பொருட்பால் - 24; காமத்துப்பால் - 3; மொத்தம் = 40

28) 'நாய்க்கால் சிறுவிரல் போல் நன்கனிய ராயினும்' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?
= நாலடியார்

29) திருக்குறள் சிறப்பு பெயர் = அடையெடுத்த கருவியாகு பெயர்

30) திருக்குறள் நூல் அமைப்பு
= அறம் - 4 இயல் + 38 அதிகாரம்; பொருள் - 3 இயல் + 70 அதிகாரம்;
இன்பம் - 2 இயல் + 25 அதிகாரம்; மொத்தம் = 9 இயல் + 133 அதிகாரம் + 1330 குறள்கள்

31) திருக்குறளுக்கு சிறந்த உரை எழுதியவர் யார்? = பரிமேலழகர் உரை

32) 'எப்பாவலரும் இயைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்தமொழி' - என்று கூறியவர் யார்?
= கல்லாடர்

33) 'ஓதற்கு எளியதாய், உணர்வதற்கு அரியதாகி, வேதப்பொருளாய் மிக விளங்கி' -
என்று கூறியவர் யார்? = செங்கண்ணனார்

34) இந்நூலை முற்றிலும் ஓதியபின் வேறு நூல் பயிற்சி வேண்டா,
மன்னுதமிழ்ப் புலவராய் வீற்றிருக்கலாம்' - என்று கூறியவர் = நத்தத்தனார்

35) திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது? = 107 மொழிகளில்

36) மொழிபெயர்த்தவர்கள் :- 1) இலத்தீன் - வீரமாமுனிவர்; 2) ஜெர்மன் - டாக்டர் கிரால்;
3) ஆங்கிலம் - ஜி.யு.போப்; 4) பிரெஞ்சு - ஏரியல்; 5) சிங்களம் - மிசகாமி அம்மையார்;
6) மலையாளம் - திவான் பகதூர் கோவிந்தப்பிள்ளை

37) திருவள்ளுவர் ஆண்டை கூறியவர் யார்? = மறைமலையடிகள்

38) 'வள்ளுவனை பெற்றதால் புகழ் வையகமே' - என்று கூறியவர்? = பாரதிதாசன்

39) ஞானப்பிரகாசம் முதன் முதலில் திருக்குறளை பதிப்பித்த ஆண்டு? = 1812

40) ஞானப்பிரகாசம் திருக்குறளை பதிப்பித்து வெளியிட்ட இடம்? = தஞ்சை

41) 'அடுத்த பிறவியில் தமிழனாகப் பிறந்து தமிழ்மொழியில் திருக்குறளைக் கற்க வேண்டும்' -
என்று கூறியவர் = காந்தி

42) ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் இடங்கள் எது? = 1) கீழ்த்திசை நூலகம் (சென்னை),
2) அரசு ஆவணக் காப்பகம் (சென்னை), 3) உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (சென்னை),
4) சரஸ்வதி மகால் (தஞ்சாவூர்)

43) உ.வே.சா வின் இயற்பெயர் யாது? = வேங்கடரத்தினம்

44) உ.வே.சா வின் ஆசிரியர் பெயர்? = மீனாட்சி சுந்தரம் பிள்ளை

45) வேங்கடரத்தினம் என்ற பெயரை சாமிநாதன் என்று மாற்றியவர் யார்?
= மீனாட்சி சுந்தரம் பிள்ளை

46) உ.வே.சா வை பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள் யார்? = ஜி.யு.போப், சூலியல் வின்சோன்

47) உ.வே.சா விற்கு நடுவண் அரசு அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு? = 2006

48) உ.வே.சா பதிப்பித்த நூல்கள் எத்தனை? = 87 நூல்கள் (அதில் சில :- வெண்பா நூல்கள் - 13; உலா - 9; அந்தாதி - 3; இதரபிரபந்தங்கள் - 4; கோவை - 6; புராணங்கள் - 12)

49) 99 மலர்கள் கொண்ட நூல் எது? = குறிஞ்சிப்பாட்டு

50) உ.வே.சா அவர்கள் ஓலைச்சுவடிகளை கண்டெடுத்த இடம் எது? = கொடுமுடி - ஈரோடு மாவட்டம்

51) உ..வே.சா நூல்நிலையம் 1942 இல் எங்கு தொடங்கப்பட்ட்து? = சென்னை பெசன்ட் நகர்

52) உ.வே.சா நினைவு இல்லம் உள்ள மாவட்டம் எது? = திருவாரூர் மாவட்டம் - (உத்தனமாபுரம் ஊர்)

53) கடைசிவரை நம்பிக்கை என்ற சிறுகதை இடம் பெற்ற நூல் எது? = டென்லிட்டில் பிங்கர்ஸ்

54) டென்லிட்டில் பிங்கர்ஸ் என்ற நூலை எழுதியவர் யார்? = அரவிந்த் குப்தா

55) காகித்தில் உருவம் செய்யும் முறையை ஜப்பானியர் எவ்வாறு அழைத்தனர்? = ஓரிகாமி

56) சடகோவுக்கு புற்று நோய் வந்த வயது எது? = 11 வது வயது - 1955 ஆண்டு

57) ஜப்பானியர் வணங்கும் பறவை இனம் எது? = கொக்கு

58) சடகோ செய்த கொக்குகளின் எண்ணிக்கை யாது? = 644

59) சடகோ தோழிகள் செய்த கொக்குகளின் எண்ணிக்கை யாது? = 356

60) சடகோவின் தோழி பெயர் என்ன? = சிசுகோ

61) சடகோ இறந்த ஆண்டு எது? = 1955 அக்டோபர் 25

62) சடகோவின் நினைவாலயத்தில் எழுதப்பட்ட வாசகம் - உலகத்தில் அமைதி வேண்டும்! இது எங்கள் கதறல்! இது எங்கள் வேண்டுதல்!

63) சடகோ வாழ்ந்த நகரம் எது? = ஹிரோஷிமா

64) பறவைகள் எத்தனை வகைகளாக பிரிக்கப்படுகிறது? = 5 வகை - ( 1.தேன், 2.பழம், 3.பூச்சி, 4.வேட்டையாடி, 5.இறந்த உடல்)

65) நிலம் + அதிக உப்பு தன்மையுள்ள நீர் + கடும் வெப்பம் - ஆகியவற்றை எதிர் கொள்ளும் தன்மை கொண்ட பறவை யாது? = பூநாரை

66) சமவெளி மரங்களில் வாழும் பறவைகள் சில = மஞ்சள் சிட்டு, செங்காகம், பனங்காடை

67) நீர்நிலைகளில் வாழும் பறவைகள் = கொக்கு, தாழைக்கோழி, பவளக்காலி, நாரை, ஊசிவால் வாத்து

68) மலைகளில் வாழும் பறவைகள் = இருவாச்சி, மின்சிட்டு, பூமன் ஆந்தை, செந்தலை பூங்குருவி

69) பருவநிலை மாற்றத்திற்காக பறவைகள் இடம் பெயர்வது? = வலசைபோதல்

70) நம் நாட்டில் உள்ள பறவைகளின் வகை யாது? = 2400

71) தமிழ் நாட்டில் உள்ள பறவைகள் சரணாயங்கள் எத்தனை? = 13

72) உலகில் பாம்புகளின் எண்ணிக்கை யாது? = 2750

73) இந்தியாவில் உள்ள பாம்புகளின் எண்ணிக்கை யாது? = 244

74) எத்தனை வகையான பாம்புகளுக்கு மட்டும் நச்சுத்தன்மை உண்டு?
= 52 வகையான பாம்புகளுக்கு

75) உலகில் நீளமான பாம்பு எது? = இராஜநாகம்

76) இந்திய இராஜநாகம் எத்தனை அடி கொண்டது? = 15 அடி

77) நல்லப்பாம்பின் நச்சு எதற்கு பயன்படுகிறது? = கோப்ரசின் எனும் வலிநீக்கி மருந்தாக

78) இந்திய அரசு வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தை இயற்றிய ஆண்டு யாது? = 1972

79) பாம்பின் விஷ வகைகளை கூறுக = 4 வகை - காளி, காளாத்திரி, நீலி, நீலிகண்டி

80) கூடுகட்டி வாழும் ஒரே வகை பாம்பு இனம் எது? = இராஜநாகம்

81) தாளில் எழுதாமல் பிறர் பாடுவதை கேட்டு பாடுவது = நாட்டுப்புறப் பாடல்

82) எழுதப்படாத வாய்வழியாக பரவுகிற கதைகள் = வாய்மொழி இலக்கியம்

83) நாட்டுப்புற பாடல்களின் வகைகள் யாது? = 7 வகை [ 1) தாலாட்டு, 2) விளையாட்டு, 3) சடங்கு, 4) கொண்டாட்டப் பாடல், 5) ஒப்பாரி, 6) வழிபாட்டு, 7) தொழிற் பாடல்கள்]

84) 'ஓதின் புகல்சால் உணர்வு' - என்ற வரி இடம் பெற்றுள்ள நூல் யாது? = நாண்மணிக்கடிகை

85) நாண்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்? = விளிம்பிநாகனார்

86) துண்டு என்ற சிறப்பு பெயரை பெற்ற நூல் எது? = நாண்மணிக்கடிகை
(கடிகை - துண்டு என்ற பொருளும் உண்டு)

87) வீரச்சிறுவன் என்ற சிறுகதை இடம் பெற்றுள்ள நூல் யாது?
= அறிவை வளர்க்கும் அற்புத கதைகள்

88) அறிவை வளர்க்கும் அற்புத கதைகள் என்ற நூலை எழுதியவர்? = ஜானகி மணாளன்

89) விவேகானந்தர் பிறந்த ஊர் எது? = கல்கத்தா

90) விவேகானந்தரின் இயற்பெயர் யாது? = நரேந்திரதத்

91) விவேகானந்தரின் செல்லப்பெயர் யாது? = பீலே

92) விவேகானந்தர் குதிரையை அடக்கிய வயது யாது? = 14 வயது

93) இளைஞர் தினம் கொண்டாடப்படும் நாள் எது? = ஜனவரி 12 (விவேகானந்தர் பிறந்த தினம் - 12-01-1863)

94) விவேகானந்தரின் குரு யார்? = இராமகிருஷ்ண பரமஹம்சர்

95) விவேகானந்தர் எந்த வயதில் சிக்காக்கோ சர்வமத மகாசபையில் இந்தியா சார்பாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்? = 30 வது வயது - (1893 செப்டம்பர் 11)

96) இராமகிருஷ்ண மடத்தை விவேகானந்தர் பேலூர் கிராமத்தில் தொடங்கிய ஆண்டு? = 1898 டிசம்பர் 9

97) பேலூர் கிராமம் உள்ள மாவட்டம் எது? = கல்கத்தா

98) நாலடியாருக்கு இணையான நூல் என எந்த நூல் அழைக்கப்படுகிறது? = பழமொழி நானூறு

99) நேரு தன் மகளுக்கு கடிதம் எழுதிய ஆண்டுகள் யாது? = 1922 - 1964 (42 ஆண்டுகள்)

100) விஸ்வபாரதி பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் எது? = மேற்குவங்காளம் - சாந்திநிகேதன்

101) யாருடைய புத்தகங்கள் சுவையானவை மற்றும் சிந்திக்க தூண்டுபவை என்று நேரு கூறுகிறார்? = பிளாட்டோ (கிரேக்க நாடு)

102) முயற்சி திருவினை ஆக்கும் எனக் கூறியவர் = திருவள்ளுவர்.

103) சாதி இரண்டொழிய வேறில்லை என்றவர் = ஔவையார்.

104) அன்றாடப் பேச்சில் பயன்படும் உயிர்மெய் எழுத்துகள் = கி, சி, பி, டி, தி, மி

105) எந்த நாடகத்தை வாசித்தாயா என்று நேரு இந்திராகாந்தியை கேட்டார்?
= சாகுந்தலம் - காளிதாஸ் (வடமொழி நாடக ஆசிரியர்)

106) யாருடைய ஆங்கிலம் அறிவுப்பூர்வமானது என்று நேரு கூறுகிறார்?
= பெட்ரண்ட் ரஸ்ஸல்

107) நேருவிற்கு பிடித்த கவிஞர் யார்? = பெட்ரண்ட் ரஸ்ஸல்

108) அல்மோரா சிறை உள்ள மாநிலம் எது? = உத்ராஞ்சல்

109) எந்த ஆண்டு நேரு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி நமக்கு பாடமாக கொடுக்கப்பட்டுள்ளது?
= 1935 பிப்ரவரி 22

110) பாடப்பகுதியில் உள்ள கடிதம் எந்த மாவட்டச் சிறையில் இருக்கும் போது எழுதப்பட்டது?
= அல்மோர சிறை

111) ஆயிரம் முகம் கொண்ட்து வாழ்க்கை; அதை புரிந்து கொள்ளவும் சரியாக வாழவும் அவசியமானது எது என்று நேரு கூறுகிறார்? = புத்தக வாசிப்பு

112) நேருவின் கடிதங்கள் தற்போது எங்கு உள்ளது?
= இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

113) எவ்வளவு துன்பமான நேரத்திலும், புத்தகம் படிக்கும் பழக்கத்தைக் கைவிடக் கூடாது என்று கடிதத்தின் மூலம் வாழ்க்கைப் பண்பை தெரிவித்தவர் = நேரு

114) உலகின் மிகச் சிறந்த நூல்களில் ஒன்று எது என்று நேரு கூறினார்?
= போரும் அமைதியும் - டால்ஸ்டாய் (ரஷ்ய அறிஞர்)

115) பெரியார் தன் இரு கண்களாக எதை கூறுகிறார்? = மரியாதையும், சுயமரியாதையும்

116) நடக்கிற எந்த ஒரு செயலுக்கும் மனிதனின் தலைவிதிதான் காரணம் என்று சொல்லிக்கொண்டே இருந்தவர் யார்? = இராமநாதன்

117) 'அறிவு என்பது வளர்ந்து கொண்டே இருக்கும்; எனவே புதியவற்றை ஏற்க வேண்டும்' - என்று கூறியவர் யார்? = பெரியார்

118) பெரியார் தன் வாழ்நாளில் உரையாற்றிய நேரங்கள் யாது? = 8600 நாள் + 13,12000 கி.மீ +

10,700 கூட்டம் + 21,400 மணி நேரம்

119) Refusal Skill - மறுத்தல் திறன் - யாரிடமிருந்து கற்பிக்கப்படுகிறது? = பெரியார்

120) இராமசாமிக்கு பெரியார் என்ற பட்டம் எந்த ஆண்டு வழங்கப்பட்டது?
= 1938 - வழங்கியவர் - எஸ்.தருமம்மாள்

121) பெரியாரை தென்னாட்டின் சாக்ரடீஸ் என்று அழைத்தவர்கள் யார்?
= யுனெஸ்கோ நிறுவனம்

122) பெரியாருக்கு யுனெஸ்கோ விருது வழங்கப்பட்ட ஆண்டு எது? = 1970

123) பெரியாருக்கு நடுவண் அரசு அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு எது? = 1978

124) புறநானூற்றின் பாவகை யாது? = ஆசிரியப்பா + வஞ்சி சீர் பரவி வரும்

125) யாதும் ஊரே யாவரும் கேளிர் மற்றும் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே - என்ற புறநானூற்று வரி எத்தனையாவது வரி
= 192 வது வரி

126) உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - என்ற புறநானூற்று பாடல் பெற்றுள்ள வரி எது?
= 182 வது வரி

127) தாராபாரதியின் வேறு நூல்கள் யாது? = இது எங்கள் கிழக்கு, விரல்நுனி வெளிச்சங்கள், பூமியை திறக்கும் பொன்சாவி,இன்னொரு சிகரம்

128) தேவர் பிறந்த ஆண்டு எது? = 1908 அக்டோபர் 30

129) தேவர் ஆசிரியர் பெயர் யாது? = குறைவாசித்தான் பிள்ளை

130) தேவர் தொடக்க பள்ளி படித்த இடம் யாது? = கமுதி

131) 'சாதியும், நிறமும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை' - என்று கூறியவர் யார்? = தேவர்

132) 'சாதி, நிறம் அரசியலுக்குமில்லை, ஆன்மீகத்திற்கும் இல்லை' - என்று கூறியவர் யார்?

= தேவர்

133) வங்காளத்தின் சிங்கம் என்று அழைக்கப்பட்டவர் யார்? = சுபாஷ் சந்திர போஸ்

134) தேவரை 'தேசியம் காத்த செம்மல்' என்று அழைத்தவர் யார்? = திரு.வி.க

135) 'தண்ணீர் விட்டா வளர்த்தோம், கண்ணீரால் காத்தோம்' - என்பது யாருடைய வாக்கு?
= பாரதி

136) மேற்கண்ட பாரதி சொன்ன வாக்கிற்கேற்ப வாழ்ந்தவர் யார்? = தேவர்

137) தேவர் கூறும் இரு கண்கள் யாது? = தெய்வீகம், தேசீயம்

138) வீரமில்லாத வாழ்வும், விவேகமில்லாத வீரமும் வீணாகும் என்று கூறியவர் யார்?
= தேவர்

139) தேவரின் வேறு பெயர்கள் யாது? = வேதாந்த பாஸ்கர், பிரணவகேசரி,
சன்மார்க்க சண்ட மாருதம், இந்து புத்த சமய மேதை

140) மனிதரின் மனநிலையை தேவர் எவ்வாறு பிரிக்கிறார்? = இருள், மருள், தெருள், அருள்

141) தேவரின் இறப்பு ஆண்டு எது? = 1963 அக்டோபர் 30 - 55 வயதில் இறப்பு

142) நேதாஜி தமிழ்நாட்டுக்கு எப்பொழுது வந்தார்? = 6 செப்டம்பர் 1939

143) நேதாஜி தமிழ்நாட்டில் எந்த இட்த்திற்கு வந்தார்? = மதுரை

144) தேவருக்கு நடுவண் அரசு அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு யாது? = 1995

145) தேவர் பொது தேர்தலில் வெற்றி பெற்ற ஆண்டுகள் யாது? = 1937, 1946, 1952, 1957, 1962

146) மக்கள் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் யார்? = பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

147) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த இடம் எது? = செங்கப்படுத்தான்காடு

148) தனது பாடல்களில் உழக்கும் மக்களின் துயரங்களையும் பொதுவுடைமைச் சிந்தனைகளை கூறியவர் யார்? = பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

149) காவிரி பாயும் சோழவளநாடு, சிற்பக்கலை கொழிக்கும் நகரம் என அழைக்கப்படும் நகரம் எது? = கும்பகோணம்

150) கும்பகோணத்திற்கு தென்புறம் பாயும் அரிசிலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஊர் = தாராசுரம்

151) தாராசுரத்தில் அமைந்துள்ள ஐராவதீசுவரர் கோவில் யாரால் கட்டப்பட்டது? = இரண்டாம் இராசராசன்

152) ஐராவதீசுவரர் கோவில் எத்தனை ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது? = 800 ஆண்டுகளுக்கு முன்

153) எந்த கோவிலின் முகப்பு கருங்கற்படியில் 'சரிகமபதநி' எனும் ஏழு இசைப்படிகள் உள்ளன? = ஐராவதீசுவரர் கோவில்

154) கோவில் விமானம் + அதன்கீழ் இருபுறம் யானை, குதிரை பூட்டிய ரதம் அமைந்த மண்டபம் - இவைகள் வான்வெளி இரகசியத்தை காட்டுவதாக எந்த வானியல் அறிஞர் கூறுகிறார்? = கார்ல்சேகன்

155) ஐராவதீசுவரர் கோவில் எந்த அரண்மனைக்கு சொந்தமானது? = தஞ்சை

156) 'சிற்பிகளின் கனவு' என்று அழைக்கப்படும் கோவில் எது? = தாராசுரத்தில் உள்ள ஐராவதீசுவரர் கோவில்

157) தீபங்குடியில் எந்த சமயத்தின் கோவில் உள்ளது? = சமணர் கோவில்

158) நூறு கோவிலின் சிற்ப அழகை காட்டும் கோவில் எது? = தாராசுரத்தில் உள்ள ஐராவதீசுவரர் கோவில்

159) எல்லீஸ் துரைக்கு கல்வி கற்பித்தவர் யார்? = இராமச்சந்திர கவிராயர்

160) நவபங்கி, சதபங்கி ஆகிய சித்திரக்கவிகள் பாடுவதில் வல்லவர் யார்? = இராமச்சந்திர கவிராயர்

161) துன்பத்திலும் நகைச்சுவையாக பாடுவதில் வல்லவர் யார்? = இராமச்சந்திர கவிராயர்

162) இராமச்சந்திர கவிராயர் யாருடன் இணைந்து சதுரகராதியை வெளியிட்டார்?
= தாண்டவராய முதலியார்

163) இராமச்சந்திர கவிராயர் தாண்டவராய முதலியாருடன் இணைந்து சதுரகராதியை வெளியிட்ட ஆண்டு யாது? = 1824

164) பகுத்தறிவு கவிராயர் என்று அழைக்கப்படுபவர் யார்? = உடுமலை நாராயணகவி

165) உடுமலை நாராயணகவிக்கு நடுவணரசு அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு யாது?
= 2008

166) கியூரி அம்மையார் பிறந்த இடம் யாது? = போலந்து - 1867

167) மேரி கியூரி கல்வி கற்ற நாடு எது? = பிரான்ஸ்

168) மேரி கியூரி, பியரி கியூரி இணைந்து ஆராய்ச்சில் முதலில் கண்டறிந்த பொருள் யாது?
= பொலோனியம்

169) பொலோனியம் கண்டறிந்து எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு ரேடியம் கண்டறியப்பட்டது?
= இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு

170) ரேடியம், பொலோனியம் - இரண்டும் கண்டறிந்ததற்காக மேரி நோபல் பரிசு பெற்ற ஆண்டு யாது? = 1903

171) ரேடியத்தின் அணு எடை கண்டறிந்தற்காக மேரி மீண்டும் நோபல் பரிசு பெற்ற ஆண்டு எது? = 1911

172) மேரி கியூரி இறந்த ஆண்டு யாது? = 1934

173) மேரி மகள் ஐரினும், மருமகன் ஜோலியட்டும் எதற்காக 1935 ஆண்டு நோபல் பரிசு பெற்றனர்? = கதீர்வீச்சு பற்றிய வேதியியல் ஆராய்ச்சிற்காக

174) நோபல் பரிசு வரலாற்றில் பரிசு பெற்ற முதற்பெண்மணி = மேரி கியூரி.

175) ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று முறை நோபல் பரிசு பெற்ற குடும்பம் = மேரி கியூரி

176) ஓடக்காண்பது - பூம்புனல் வெள்ளம்; ஒடுங்கக்காண்பது - யோகியோர் உள்ளம்;
வாடக் காண்பது - மின்னார் மருங்கு (பெண்கள் இடை); வருந்தக் காண்பது -
சூல் உளைச்சங்கு; போடக் காண்பது - பூமியில் வித்து;
புலம்பக்காண்பது - கிண்கிணிக் கொத்து; தேடக்காண்பது - நல்லறம் கீர்த்தி

177) திவ்வியக்கவி, தெய்வப்புலவர், அழகிய மணவாளதாசர் - என அழைக்கப்படுபவர் யார்?
= பலபட்டை அழகிய சொக்கநாதபுலவர்

178) அழகிய சொக்கநாதபுலவர் பிறந்த இடம் யாது? = தச்சநல்லூர் - தஞ்சை

179) முரப்பு நாடு எந்த மண்டலத்தை சார்ந்தது? = பாண்டி மண்டலம்

180) முரப்பு நாடு தற்போது எந்த நதிக்கரையின் மேல் அமைந்துள்ளது?
= பொருணையாற்றின் நதிக்கரை

181) கொரநாடு எந்த வட்டத்தை சார்ந்தது? = மாயவரம்

182) கானாடு எந்த வட்டத்தை சார்ந்தது? = பட்டுக்கோட்டை வட்டம்

183) தொன்னாடு எந்த வட்டத்தை சார்ந்தது? = மதுராந்தக வட்டம்

184) ஆழ்வார் திருநகரியின் பழைய பெயர் யாது? = குருகூர்

185) பன்மொழிப்புலவர் என அழைக்கப்படுபவர் யார்? = க.அப்பாதுரை

186) கற்பனைக் களஞ்சியம் என அழைக்கப்படுபவர் யார்? = சிவப்பிரகாசர்

187) பைந்தமிழ்ப்பாவலர் என அழைக்கப்படுபவர் யார்? = மு.வெ.கங்காதரன்

188) நட்பு எழுத்துக்கள் வேறு பெயர் யாது? = இன எழுத்துக்கள்

189) வான்வழியே நினைத்த இடத்துக்கு செல்லும் சித்தர்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
= கமனசித்தர்

190) மனிதனின் இறப்பை நோய் நீக்கி காப்பாற்றும் மூலிகை யாது? = காயசித்தி

191) தலைசாய்தல் - என்பதன் பொருள் யாது? = ஒய்ந்து படுத்தல்

192) பாரதியார் எத்தனை மாதங்கள் எங்கு ஆசிரியர் பணி செய்தார்? = 3 திங்கள் - மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி

193) பாரதியாரின் முதல் உரைநடைக்காவியம் யாது? = ஞானரதம் (1908)

194) பாரதியாரின் மொழிபெயர்ப்பு நூல் யாது? = பகவத்கீதை

195) பாரதியார் எந்த நூலுக்கு உரை விளக்கம் தந்துள்ளார்? = பதஞ்சலி யோக சூத்திரம்

196) பக்கிம் சந்திர சாட்டர்ஜியின் வந்தே மாதிரம், பகவத்கீதை ஆகிய நூல்களை பாரதியார் எந்த இதழில் மொழிபெயர்த்தார்? = சக்கரவர்த்தினி (மகளிர் மாத இதழ்)

197) பாரதியாரின் ஞானகுரு பெயர் யாது? = சாரு நிவேதிதா

198) பாரதியாரின் அரசியல் குரு யார்? = திலகர்

199) பாட்டுக்கொரு புலவன் பாரதி என்றவர் கவிமணி.

200) கேலிச்சித்திரம் எனும் வரையும் முறையை தமிழுக்கு முதலில் தந்த கவிஞர் யார்? = பாரதியார்

201) பாரதியாரின் வேறு பெயர்கள் யாது? = சாவித்திரி என்ற நிருபநேயர், காளிதாசன், ஓர் உத்தம தேசபிமாணி, சக்திதாசன்

202) தன் எழுத்துடன் மட்டும் சேரும் மெய்யெழுத்துகள் யாது? = க், ச், ப், த்

203) தன் எழுத்துடன் அல்லாமல் பிற எழுத்துடன் சேரும் எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = வேற்றுநிலை மெய் மயக்கம் - எ.கா :- சார்பு, வாழ்க்கை

204) தன் எழுத்துடன் அல்லாமல் பிற எழுத்துடன் சேரும் எழுத்துகள் யாது? = ர், ழ்

205) தன் எழுத்து + பிற எழுத்து - இரண்டும் சேர்ந்து வரும் எழுத்துக்கு எ.கா தருக? = ற், ன்

206) பாரதிதாசனை புரட்சிக்கவி என்று அழைத்தவர் யார்? = அண்ணா - 1946

207) பாரதிதாசன் பாரதியாரை சந்தித்த இடம் எது? = வேணு நாயக்கர் வீட்டு திருமணம்

208) பாரதிதாசனின் வேறு பயர்கள் யாது? = கண்டெழுதுவோன், கிறுக்கன்

209) குடும்பக் கட்டுப்பாட்டு பற்றி முதன் முதலில் பாட்டெழுதிய முதற்பாவலன் யார்?
= பாரதிதாசன்

210) பாரதிதாசன் ஒரே இரவில் எழுதிய நூல் யாது? = தமிழியக்கம்

211) கல்லாத பெண்களின் இழிவைக் கூறும் பாரதிதாசனின் நூல் யாது? = இருண்ட வீடு

212) கற்ற பெண்களின் சிறப்பைக் கூறும் பாரதிதாசனின் நூல் யாது? = குடும்ப விளக்கு

213) இயற்கையை வர்ணிக்கும் பாரதிதாசனின் நூல் யாது? = அழகின் சிரிப்பு.

214) எந்த ஆண்டு பாரதிதாசனின் நூல்கள் பொதுவுடமையாக்கப்பட்டன? = 1990

215) வினா மற்றும் விடை எத்தனை வகைப்படும்? = வினா - 6 வகை [1) அறி வினா,
2) அறியா வினா, 3) ஐய வினா, 4) கொளல் வினா, 5) கொடை வினா, 6) ஏவல் வினா];
விடை - 8 வகை [1) சுட்டு விடை, 2) மறை விடை, 3) நேர்விடை, 4) ஏவல் விடை,
5) வினா எதிர் வினாதல் விடை, 6) உற்றது உரைத்தல் விடை, 7) உறுவது கூறல் விடை,
8) இனமொழி விடை]

216) "வைதோரைக் கூட வையாதே" என்ற சித்தர் பாடலை பாடியவர் = கடுவெளிச் சித்தர்.

217) உருவ வழிபாடு செய்யாமல் இயற்கையை கடவுளாக வழிபட்டவர் = கடுவெளிச் சித்தர்.

218) கடுவெளிச் சித்தர் பாடிய பாடல்கள் = 54.

219) நந்தவனத்தில் ஓர் ஆண்டின் அவன் நாடாறு மாதமாய் என்ப் பாடியவர் = கடுவெளிச் சித்தர்.

220) அப்துல் ரகுமானின் பிற படைப்புகள் யாது? = சுட்டுவிரல், பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன்.

221) புதுக்கவிதை புனைவதில் புகழ் பெற்ற கவிஞர் - கவிக்கோ அப்துல்ரகுமான்.

222) கவிஞர் அப்துல் ரகுமானின் எந்த நூல் சாகித்ய அகாடமி விருது பெற்றது? = ஆலா பனை

223) தாகம் என்ற கவிதை எந்த கவிதை அப்துல் ரகுமானின் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது? = பால் வீதி

224) புரம்: புரம் என்னும் சொல் சிறந்த ஊர்களை குறிப்பதாகும். ஆதியில் காஞ்சி என்று பெற்ற ஊர் பின்னர் "புரம்" என்பது சேர்ந்து காஞ்சிபுரம் ஆயிற்று. பல்லவபுரம்(பல்லாவரம்), சோழபுரம், தருமபுரம் போன்றவை மேலும் சில எடுத்துக்காட்டுகளாகும்.

225) பட்டிணம்: கடற்கரையில் உருவாகும் நகரங்கள் "பட்டிணம்" எனப் பெயர் பெரும். காவிரிப்பூம்பட்டிணம், நாகபட்டிணம், காயல்பட்டிணம், குலசேகரபட்டிணம், சதுரங்கபட்டிணம் ஆகியவை "பட்டிணம்" எனப் பெயர் பெற்ற ஊர்களாகும்.

226) பாக்கம்: கடற்கரைச் சிற்றூர்கள் "பாக்கம்" எனப் பெயர் பெரும். கோடம்பாக்கம், மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேப்பாக்கம் இப்படிப் பாக்கம் எனப் பெயர் பெற்ற ஊர்களைக் குறிப்பிடலாம்.

227) புலம்: புலம் என்னும் சொல் நிலத்தைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக மாம்புலம், தமராபுலம், குரவைபுலம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

228) குப்பம்: நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள் குப்பம் என்னும் பெயரால் அழைக்கப்படும். காட்டுக்குப்பம், நொச்சிக்குப்பம் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

229) நாம் பேசும் மொழி மற்றும் எழுதும் மொழியை முறையாகப் புரிந்து கொள்வதற்கு தேவைப்படுவது = இலக்கணம்.

230) தமிழ்ச்சொற்கள் எத்தனை வகைப்படும் = 4 வகை [1. பெயர்ச்சொல், 2. வினைச்சொல், 3. இடைச்சொல், 4. உரிச்சொல்]

231) கன்னியாகுமாரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்ட ஆண்டு = 2001 சனவரி 1.

232) ஊரும் பேரும் என்ற நூலை ஆசிரியர் யார்? = இராபி.சேதுபிள்ளை

**சொற்பொருள்:**

ஆர்வலர் - அன்புடையவர்

புன்கணீர் - துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்

என்பு - எலும்பு. இங்கு உடல், பொருள், ஆவியைக் குறிக்கிறது.

வழக்கு - வாழ்க்கை நெறி

நண்பு - நட்பு

மறம் - வீரம், கருணை (வீரம் இரண்டிற்குமே அன்புதான் அடிப்படை என்பது பொருள்)

அன்பிலது - அன்பில்லாத உயிர்கள்

என்பிலது - எலும்பில்லாதது(புழு)

பூசல் தரும் - வெளிப்பட்டு நிற்கும்

ஆருயிர் - அருமையான உயிர்

ஈனும் - தரும்

ஆர்வம் - விருப்பம் (வெறுப்பை நீக்கி விருப்பத்தை உண்டாக்கும் என்று பொருள்)

வையகம் - உலகம்

என்ப - என்பார்கள்

புறத்துறுப்பு - உடல் உறுப்புகள்

எவன் செய்யும் - என்ன பயன்?

அகத்துறுப்பு - மனத்தின் உறுப்பு, அன்பு

அணியார் = நெருங்கி இருப்பவர்

என்னாம் = என்ன பயன்?

சேய் = தூரம்

செய் = வயல்

அனையர் = போன்றோர்

வண்மை = கொடை (வன்மை = கொடுமை)

உழுபடை = விவசாய கருவிகள்

கோணி - சாக்கு

தலை சாயுதல் - ஓய்ந்து படுத்தல்

ஞாலம் - உலகம்

உவந்து செய்வோம் - விரும்பிச் செய்வோம்

நெறியினின்று - அறநெறியில் நின்று

மடவாள் - பெண்

தகைசால் - பண்பில் சிறந்த
உணர்வு - நல்லெண்ணம்
புகழ்சால் - புகழைத் தரும்
காதல் புதல்வர் - அன்பு மக்கள்
மனக்கினிய - மனத்துக்கு இனிய
ஓதின் - எதுவென்று சொல்லும்போது
வானப்புனல் - மழைநீர்
வையத்து அமுது - உலகின் அமுதம்
வையம் - உலகம்
தகரப்பந்தல் - தகரத்தால் அமைக்கப்பட்ட பந்தல்
புனல் - நீர்
பொடி - மகரந்தப் பொடி
தழை - செடி

தழையா வெப்பம் - பெருகும் வெப்பம், குறைய வெப்பம்
தழைத்தல் - கூடுதல், குறைதல்
தழைக்கவும் - குறையவும்.
ஆற்றவும் - நிறைவாக
வீறாப்பு - இறுமாப்பு
கடம் - உடம்பு.
சாற்றும் - புகழ்ச்சியாக்ப் பேசுவவது.
கடம் - உடம்பு
வெய்யவினை - துன்பம் தரும் செயல்
சாற்றும் - புகழ்ச்சியாகப் பேசுவது
அவல் - பள்ளம்
மிசை - மேடு,
**நல்லை - நன்றாக இருப்பாய்.**

ஈரம்- அன்பு,
அளைஇ - கலந்து

படிறு - வஞ்சம்
அகன் - உள்ளம்,
அமர் - விருப்பம்
செம்பொருள் - சிறந்த பொருள்
துவ்வாமை - வறுமை
அல்லவை - பாவம்

நன்றி - நன்மை
சிறுமை - துன்பம்
ஈன்றல் - தருதல்,
வனகொல் - கடுஞ்சொல்
கவர்தல் - நுகர்தல்.
உதுக்காண் - சற்றுத் தொலைவில் பார்
உப்பக்கம் - முதுகுப்பக்கம்
உம்பர் - மேலே
ஈன்றல் - தருதல், உண்டாக்குதல்
வன்சொல் - கடுஞ்சொல்
எவன்கொலோ - ஏனோ?
சிறுமை - துன்பம்
மறுமை - மறுபிறவி
இம்மை - இப்பிறவி
நாடி - விரும்பி
அல்லவை - பாவம்

தலைப்பிரியாச் சொல் - நீங்காத சொற்கள்
அணி - அழகுக்காக அணியும் நகைகள்
துவ்வாமை - வறுமை
இன்புறூஉம் - இன்பம் தரும்
அகத்தான் ஆம் - உள்ளம் கலந்து
முகன் - முகம்

இன்சொலன் - இனிய சொற்களைப் பேசுபவன்
ஈரம் - அன்பு
அளைஇ - கலந்து
செம்பொருள் - மெய்ப்பொருள்
கவர்தல் - நுகர்தல்
வானரங்கள் - ஆண் குரங்குகள்
மந்தி - பெண் குரங்குகள்
வான்கவிகள் - தேவர்கள்
காயசித்தி - இறப்பை நீக்கும் மூலிகை
வேணி - சடை
மின்னார் - பெண்கள்
மருங்கு - இடை

**பிரித்து எழுதுக:**

அன்பகத்தில்லா = அன்பு + அகத்து + இல்லா

வன்பாற்கண் = வன்பால் + கண் - பாலை நிலத்தில்

தளிர்த்தற்று - தளிர்த்து + அற்று
வற்றல்மரம் - வாடிய மரம்
நாற்றிசை - நான்கு + திசை
ஆற்றுணா - ஆறு + உணா
இனிதீன்றல் - இனிது + ஈன்றல்

**தயக்கம் இன்றித் தமிழிலேயே பேசுவோம்**

* டிவி - தொலைக்காட்சி
* ரேடியோ - வானொலி

* டிபன் - சிற்றுண்டி
* டீ - தேநீர்
* டெலிபோன் - தொலைபேசி
* கரண்ட் - மின்சாரம்
* ஃபேன் - மின்விசிறி
* சேர் - நாற்காலி
* லைட் - விளக்கு
* டம்ளர் - குவளை
* சைக்கிள் - மிதிவண்டி
* பிலாட்பாரம் - நடைப்பாதை
* ஆபிஸ் - அலுவலகம்
* சினிமா - திரைப்படம்
* டைப்ரைட்டர் - தட்டச்சுப்பொறி
* ரோடு - சாலை
* பிளைட் - விமானம்
* பேங்க் - வங்கி
* தியேட்டர் - திரை அரங்கு
* ஆல்பத்திரி - மருத்துவமனை
* கம்ப்யூட்டர் - கணினி
* காலேஜ் - கல்லூரி

* யுனிவர்சிட்டி - பல்கலைக்கழகம்
* டெலஸ்கோப் - தொலைநோக்கி
* தெர்மோமீட்டர் - வெப்பமானி
* இன்டர்நெட் - இணையம்
* இஸ்கூல் - பள்ளி
* சயின்ஸ் - அறிவியல்
* மைக்ரோஸ்கோப் - நுண்ணோக்கி
* நம்பர் - எண்